OCT 1924

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 6 | 1924ஞ ஜனவரிமீ | பகுதி 1

தெய்வ வணக்கம்

செக்காளகேச சிகரத்நபுரி ராசிநிறை
சிந்தப்புராரி யமிர்தம்
திரும்பப்பிறந்தென வாயிரம் பகுவாய்கள்
தீவிஷங் கொப்புளிப்பச்
சக்ரகிரி சூழவரு மண்டலங்கள் சகல
சங்கார கோரநயனத்
தறுகண்வாசுகிபணா முடியெடுத் ததிருமொரு
சண்டப்பிரசண்டமயிலாம்
விக்ரமகிராத குலிபுனமீதிலாவியு
விருத்தன் திருத்தணிகைவாழ்
வேலாயுதன் பழவினைத் துயராறுத்தெனை
வெளிப்பட வுணர்த்தியருளித்
துக்கசுகபேதமற வாழ்வித்[illegible]ச்
சுவாமி வாகனமானதோர்
தூரகசாதகடக விகடதட நிருதர்குல
துஷ்டர்நிஷ் டூரமயிலே

அருணகிரிநாதர் அருள் வாக்கு

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
186464
சென்னை-600 008

ஹிதோப தேசம்.

1. உலகத்திலே தோன்றிய நதிகளெல்லாம் பல வேறிடங்களிலே உற்பத்தியாகி, வெவ்வேறு வழிகளிலே சென்று முடிவில் கடலிலே சங்கமமாகின்றன. அது போலவே தோன்றிய மதங்களெல்லாம் பெயரினும் கொள்கையிலும் வெவ்வாருகப் புலப்பட்டாலும் முடிவில் ஒரேகடவுளைக் குறிக்கின்றன. (விவேகாநந்தர்)

ஆதலின் மதச்சண்டைபோடாதே

2. பாபத்திற்கு லோபமேகாரணம். லோபிக்குத் தாயுமில்லை தந்தையுமில்லை; சகோதரி சகோதரனுமில்லை. லோபியின் நெஞ்சிலே வஞ்சகம் குடிகொள்ளும். கோபத்துக்குக் காரணமாயிருப்பது லோபமேயாம். கோபம் துரோகசிந்தினையையுண்டாக்கும். துரோகங் காரணமாகப் பகைமேலிடும். அதனுல் நரகவாதனையுண்டாம் ஆதலின் லோபத்தை விட்டுவிடு.

3. மூடருக்குப்புத்தி சொல்வது கூடாது. அவ்வாறு கூறினும் அவமதிப்புண்டாகும். அவமதிப்படைந்தவர் பிறகு அவரைவெறுப்பதற்கிடமில்லை.

4. செய்யுங்காரியத்திற்கு இடையூறாய் நிற்பவைகளை விலக்கிக் காரியத்தினிடத்திலே கண்ணுயிருப்பதே முயற்சியாம். அத்தருணம் மனத்திலுண்டாகும் கிளர்ச்சியே ஊக்கமாம். ஊக்கமும் முயற்சியும் ஒன்று சேரப்பாடுபடு.

பாலவிநோதினியின்

ஆறுவதாண்டு விஜயம்

தன்மை பெருகவும் தின்மை கருகவும்
தொன்மை யுயரவும் புன்மை யயரவும்
செய்தவ முயலவும் கைதவ மொழியவும்
தேசஞ் செழிக்கவும் பாசங் கழியவும்
பிள்ளைகளிடத்திற் பெற்றவர் மகிழ்ந்து
கொள்ளுநற் கருணை கொண்டுல குக்கு
நலம்பல ஓதிமெய்ஞ் ஞான பாநுவாய்
இலகியெவரும் இனிதுவந் தேற்கும்
வண்ணஞ் சிறந்து தண்ணருள் பொழியும்
பால விநோதினி பாரினி லென்றும்
தேவியல் போடு சிறந்தினி தோங்கி
உலவ வேலவன் உலவா அருள்மழை
பொழியுமா றவன்றன் கழலடி முடிமேற்
கொண்டிரு கரமலர் கூப்பித் துதிப்பாம்.

பிரகலாத வெண்பா

(364-ம் பக்கத் தொடர்ச்சி)

(பிரகலாதன் கூறுதல்)

தாங்கருந்தீங் காற்றினர் தம்மைத்தண் டித்துநல்லோர்
பாங்கிருந்தோம் புங்கருணைப் பண்ணவன்மேல்—நாங்குறைகள்
நாடுவதோ நன்றென்றான் நான்மறையின் மெய்ப்பொருளைக்
கூடுவதோர் ஞானக் குணன். (16)

(இரணியன் சொல்லுதல்)

சிறியையநீ இன்னுந் தெரிவபல வுண்டுன்
அறிவை வளர்க்கவழி யாய்வேன்—நெறியுணர்ந்த
தேசிகன்பால் மீண்டும்போய்த் தேரென்றான் சீற்றத்திற்
கோசிகனேர் தானவர்தங் கோன். (17)

(கவிக் கூற்று)

தனயர்மிசை நீங்காச் சலிப்புறினும் பெற்றோர்
விநயமுடன் அன்னவர்க்கு வேண்டுஞ்—சுநயம்
துறப்பரோ இல்லந் துறந்தாரும் அஃது
மறப்பரிய ராயின் மதித்து. (18)

சுக்கிரன்கண் சென்ற சுடரறிவன் மெச்சுதிரி
விக்கிரமன் கீர்த்தி விளம்பியே—தக்கபடி
பள்ளியில்வா சித்துவரும் பாலனையெல் லாந்திருத்தி
ஒள்ளியராய் வாழவைத்தான் ஓர்ந்து. (19)

(சுக்கிரன் முறைப்பாடு)

கண்டனனிச் சூத்திரதக் கடிதோடி வேந்தன்முன்
அண்டருமேத் தும்பெயர்கொள் ஐயனே!—மிண்டனும்
நின்மகனுற் பாலரெலாம் நீத்தாரென் போதனையைத்
தன்மமிதோ வென்றான் தவித்து, (20)

பிழை திருத்தம்—பாலவிநோதினி 331-ம் பக்கத்தில் ‘பிரகலாத வெண்பா’ 10 வது பாடல் இரண்டாவது வரியில் ‘அழைத்தே னென்றான்’ என்றுள்ளதை ‘அழைத்ததிங் கேனென்றான்’ என்று படிக்கவும்.

ம. இராஜ கோபால பிள்ளை,
வித்வான், கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

யுக்தியும் புத்தியும்சித்தி பயக்கும்

புவனகிரி என்கிற ஊரில் புவனேசுவரன் என்று ஓர் அரசனிருந்து அரசுபுரிந்துவந்தான். அவனுக்குக் கதைகேட்பதில் விருப்பம் அதிகம். ஆனால் அவன்கெட்ட இடும்புக்காரன். உலகத்தில் அவன் தான் பார்ப்பதை யெல்லாம் பழிப்பான். தன்னைவிட மேலான புத்திசாலி யும் யுக்திசாலியும் பலசாலியும் இல்லை யென்பது அவன் எண்ணம். அதனால் அவன் எப்போதும் கேலியும் சிரிப் புமாகவே காலங்கழிப்பான்.

இவன் ஒருசமயம் தான் திருப்தியடையும் வரை யில் தொடர்ந்தாற் போல் கதைசொல்லுகிறவர்களுக்கு அவர்கள் கேட்ட வெகுமதி தரப்படும் என்று பறைபறை வித்தான்; தேசங்கடோறும் தூதர்கள் மூலமாக அதை விளம்பரப்படுத்தினன்.

அப்பால் நாடோறும் அநேகபுலவர்கள் அவ்வர சனிடம் வந்து கதைசொல்லத் தொடங்கினர். அரசனை ஒருவராலும் திருப்திசெய்விக்க முடியவில்லை. கொஞ்ச நாளில் அரசன் ஆயிரக்கணக்கான கதைகள் தெரிந்து கொண்டான். யாரேனும் வந்து தெரிந்த கதையைச் சொன்னால், 'அது எனக்குத் தெரிந்தகதை' வேறுகதை சொல்லும் என்று கேட்டுப்புதுக்கதை சொன்னால் 'இன் னொருகதை' யென்று கேட்டு அதில் திருப்தியடையாத வனைப்போலிருந்து வெகுமதிகொடாமல் அனுப்பிவிடு வான்.

அரசன் இவ்வாறு செய்து வருவதையறிந்த ஒரு புலவன், அவனை வெல்வதற்கேற்றபடி ஒரு கதையைத் தீர்க்காலோசனை செய்து தெரிந்துகொண்டு அரசனிடம் போய்த் தன்வருகையைத் தெரிவித்தான். இந்தப்புலவன் மகா ஆடம்பரக்காரனாதலால் இவனை அரசன் தன்னிடம் வரவழைத்துக் கண்டதும் வீற்றிருக்க வேண்டிக்கொண்டு தக்கபடி உபசாரஞ்செய்து "உமது பெயரென்ன?" என்று கேட்டான்.

புலவன்—"பிரபுவே என்பெயர் கதாசாகரன்" என்றான்.

அரசன்—உமக்கெத்தனை கதைதெரியும்?—என்று கேட்டான்.

புலவன்—எனக்கு அளவில்லாத கதைகள் தெரியும். ஆகையினாலேதான் எனக்குக் கதாசாகரன் என்று பெயருண்டாயிற்று—என்றான்.

அரசன்—இப்போது ஒருகதை சொல்லும். நீர் சொல்லும் கதை எனக்குத் தெரியாததாயும் கேட்க மகிழ்ச்சிதருவதாயும் மேன்மேலும் கேட்க விருப்பந்தருவதாயுமிருக்கவேண்டும்—என்றான்.

புலவன்— "பிரபுவே, அப்படியே" என்று கூறிக் கதைசொல்லுகிறான்—

வேந்தே, ஓர்ஊரில் நாலாயிரம் யோசனை அகலமும் ஆறாயிரம் யோசனை நீளமுமுள்ள ஒருதடாகமுண்டு. அதில் கொஞ்சமும் இடைவெளியே இல்லாமல் தாமரைகள் மலர்ந்திருக்கும். அந்தமலர்களிலே கோடானுகோடி அன்னப் பறவைகள் விண்ணுலகத்திலிருந்து வந்து

நாடோறும் இறங்கும். அப்படி இறங்கும்போது ஒரு நாள் காற்றுமழையும் கலந்தடிக்கத் தொடங்கிற்று—

அந்தச்சமயத்தில் அந்த மழைக்கஞ்சிய அவ்வன னங்கள், அருகிலிருந்த ஒருமலைக் குகையினுள்ளே புகுந் தன" என்றான்.

அரசன்—அப்பால்-என்றான்.

புலவன்—அவற்றிலொன்று புறப்பட்டது - என் றான்.

அரசன்—பின்பு.

புலவன்—மற்றொன்று புறப்பட்டது !

அரசன்—பின்பென்ன?

புலவன்—இன்னொன்று புறப்பட்டது !

இவ்வாறு வேந்தன் கேட்குந் தோறும் புலவன் மற்றொன்று இன்னொன்று, மற்றொன்று இன்னொன்று என்று சொல்லிக்கொண்டே வந்தான். ஆகையினால், அரசன் வெட்கமடைந்து இவனை வெல்வதரிதெனக் கண்டு, அவன் விரும்பியபடி வெகுமதி தர நிச்சயித்துப் "புலவரே, உமது கதையினால் நான் திருப்தியடைந்தேன். நீர் விரும்பும் வெகுமதியென்ன?" என்று கேட்டான்.

புலவன்—வேந்தே, சந்தோஷம். முதலில் நான் விரும்புவது யாதெனில், இனி இப்படிப் புலவர்களை வீணாக வருத்திச் சந்தோஷப்படுவதை விட்டுவிடவேண் டும். இரண்டாவது, யுக்தியும் புத்தியுமுடைய புல வர்களை நீர் ஸமஸ்தானத்தில் வைத்து ஆதரித்து வரவேண்டும். மூன்றாவதுயாதெனில், உமக்கு இஷ்ட மெப்படியோ அப்படி எனக்கு வெகுமதிதரலாம் - என் றான்.

புலவர் இவ்வாறு நிராசையாய்ப் பேசுவதைக் கேட்டதும் அரசன் என்றுமடையாத மகிழ்ச்சியடைந்து, அவர்திருவடியிலே விழுந்து பணிந்து அவரைத்தனக்குக் குருவாக இருக்கும்படி வேண்டிக்கொண்டு அவரைத் தன் பக்கத்திலேயே வைத்து ஒருகுறைவு மில்லாமல் ஆதரித்து வந்தான்.

புலவரும் அரசனுக்குவேண்டிய போதனைகளை அவ்வப்போது செய்து அவனை நல்லவழிக்குக் கொண்டு வந்து ஊரும் உலகமும் புகழவிளங்கினர்.

ஹாஸ்யம்

நாட்டுப்புறத்தில் சுப்பராயன் என்பவன் ஒருவன் ஒருகிணற்றில் ஜலம் இழுக்கப் போனான். அக்கிணற்றின் குறுக்கே இருகரைக்கும் ஒருபலகை போடப்பட்டிருந்தது. அந்தப்பலகையில் ஒருகாலும் கிணற்றின் கரையில் ஒருகாலும் வைத்துக்கொண்டு தோண்டியைக் கிணற்றில் விட்டுத் தண்ணீர் இழுப்பதுவழக்கம். இவ்விதமாகவே சுப்பராயனும் பலகையில் ஒருகாலை வைத்துக்கொண்டு தண்ணீர் இழுத்தான். இழுக்கும்போது பலகை ஒடிந்துபோய் விட்டது. பலகையுடன் கூடவே சுப்பராயனும் கிணற்றில் விழுந்துவிட்டான். பக்கத்திலிருந்தவர்கள் ஓடிவந்து கிணற்றில் இறங்கி அவனை வெளியே தூக்கி விட்டு "ஜாக்கிரதையாய் இழுக்கவேண்டாமா? இப்படிக் கிணற்றில் விழலாமா?" என்று கேட்டார்கள்.

சுப்பராயன், "நான்தான் கயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தேனே?" என்றான். வந்தவர்கள் சிரித்துச் சென்றனர். அவர்கள் சிரித்தது தன் யுக்தியை மெச்சியதா யெண்ணிச் சுப்பராயன் வீடுபோனான்.

இப்படிப்பட்ட மூடர்கள் இந்த நாகரிககாலத்திலும் உலாவுவது விந்தையேயன்றோ?

ஸ்ரீ ராமாவதாரம்.

(337ம் பக்கத் தொடர்ச்சி)

சுந்தர காண்டம்

அன்பும் ஆற்றலும் பொருந்திய இளவரசான அங்கதனைத் தளாதிபதியாகக்கொண்டு சீதாபிராட்டியின் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்கப் புறப்பட்ட சுக்கிரீவ மகாராஜனது சேனைகள், மகேந்திர கிரியினின்றும் பலதிசையும் பிரிந்து சென்றன. வாயு புத்திரரும், ருத்திராம்சரும், பண்டிதோத்தமருமான ஆஞ்சநேயர் மட்டும் அப்பருவதத்தினின்றும், அதன் உச்சி முகட்டை நெருங்கி நின்ற ஸ்வர்க்க லோகத்துக்குப்போய், அங்கெங்கேனும் பிராட்டி சிறைவைக்கப் பெற்றிருக்கின்றனளோவென்று தேடிப்பார்த்து, இல்லையென்றுணர்ந்து, மீண்டும் அம்மந்தரமலைக்கே திரும்பினர்; பற்பல ஆழ்ந்த யோசனையுடன் அங்கிருந்தபடியே திருஷ்டியை நாலாபக்கமுஞ் செலுத்தினர்; அண்ட முகட்டை யளாவிய மாடமாளிகை கூடகோபுரங்களடர்ந்து அளவுக்கடங்காத விஸ்தீரணத்தைக்கொண்ட பெரிய நகரமொன்றைக் கண்ணுற்றனர்; இந்நகரந்தான் இலங்கையாயிருக்கவேண்டுமென்று தமக்குள் நிச்சயங் கொண்டனர். அதுகண்கூசத்தக்க காந்தியைக் கொண்டிருந்தது; பொன்னிழை பூண்ட நவரத்தின கசிதமாய்

விளங்காநின்றது; ஆனால் நாற்புறமும் கடலாற்சூழப் பெற்றிருந்தது. கடலைக் கடந்தன்றி யங்குப் போவது கூடாதகாரிய மென்று அவருணர்ந்தார். "ஆயினும் இராமகயிங்கரியத்தில் ஈடுபட்ட நாம் எத்தகைய அருமையையும் பாராட்டக்கூடாது. முன்வைத்தகாலைப் பின் வைப்பது சுத்தவீரர்க் கழகாகாதே" என்று வாதாத்மஜர் தீர்க்கமாய் ஆலோசித்தனர்.

ஆண்மை வாய்ந்த அவ்வனுமந்தர், கடலைக்கடந்து இலங்கைக்குப் போவதே சரி யென்று துணிவுபூண்டு ஆகாயமார்க்கமாகக் கிளம்பினார். கிளம்பிய வேகத்தால் கடல் கிழிய நாகலோகம் நன்றாய்த் தெரிந்தது. இராமபிரானது திருப்பணியை மேற்கொண்ட நாம் நாகலோகத்தையும் பார்க்கப்பெற்றோமே என்று அவர் மனக்களிப்பெய்தினார். உலகத்தின் க்ஷேமத்தை யுத்தேசித்துண்டான இத்திருப்பணிக்கு நாமும் உதவிபுரியவேண்டுமென்று மேல்நோக்கி எழுந்ததைப் போன்று, அவ்வேகத்தா லுண்டாகிய காற்றின் பரிசத்துக்காற்றாத பொருள்களெல்லாம் பறக்கலுற்றன. ஆனால் ஆஞ்சநேயரின் வேகத்தைப் பின்பற்றக் கூடாமல் அவை நாணமுற்றன வாய்க் கீழிழிந்தன.

இவ்வாறு ஆகாயவீதியிற் செல்லும் மாருதிபகவானை மைநாகம் என்னும் மலையொன்று கடலினின்றும் மேலெழும்பிச் சந்தித்தது. அம்மலை அவ்வீரசிகாமணியை நோக்கி "அன்ப! சிறிதுநிற்க; பிரயாணத்தைத் தடுக்கிறேனென்று சீறற்க;

* "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு"

என்று உத்தரவேதங் கூறுகின்றது. இந்திரனால் மலைகளெல்லாம் தமக்கிருந்த சிறகையிழந்தபோது உமது

* எப்படிப்பட்ட தருமங்களை அழித்தவர்க்கும் பிராயச்சித்தமூலமாக நன்மையுண்டாகலாம்; ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தவனுக்கு ஒருபோதும் நன்மையுண்டாகாது.

தந்தையானவர் என்னை அவன் காணு விதம் கடற்குள் மறைந்து வாழும் பாக்கியத்தை எனக்களித்தனர். அவர் செய்த நன்றிக்குப் பிரதியுபகாரம் நான் ஒன்றுஞ் செய்ய வில்லை. அவருடைய அருமைப் புத்திரராகிய உம்மை நான் இப்போது காணப்பெற்றேன். ஒருவேளை போ ஜனமாவது போட்டனுப்ப வேண்டுமென்கிற எண்ணத் தைக் கொண்டேன். கிருபைசெய்யவேண்டும்'' என்று பிரார்த்தித்தது.

ஈடற்ற பராக்கிரம சாலியாகிய அஞ்சனைச் செல்வர் மைநாகங்கூறிய மொழியைக் கேட்டு, சந்தோஷங்கொண்டு "அன்பிற்குரியோய்! நான் இப்போது முக்கிய மானதோர் அவசரவேலையாகப் போகிறேன். அந்தவேலை முடிந்தபிறகுதான் புசிப்பெடுத்துக் கொள்ளுவேன். நீ முகமலர்ந்து உள்ளன்போடு பேசிய பேச்சே எனக்கு வயிறு நிரம்ப அன்னமிட்டது போலாயிற்று; என் அசு மூங்குளிர்ந்தது. நீயுன்னிருப்பிடம் போய்ச் சுகமாயிரு'' என்று நவின்றருளித் தமது பயணத்தை நடத்தலுற்றார்.

உவணேந்திரனும் (கருடபகவானும்) நாணத்தக்க வேகத்தோடு செல்லும் ஆஞ்சநேயரைக் கொஞ்சதூரத் தில் சுரசை என்னும் அரக்கி யொருத்திகண்டாள் "ஆரடா போகிறவன்? நில் நில் நான் அகோரமான பசிப்பிணியால் வருந்துகிறேன். உன்னைத் தின்றுதான் அப்பிணியை யொழிக்கவேண்டும். இதோ வந்துவிட்டேன்'' என்று சொல்லி ஆரவாரஞ் செய்தாள்; தன் வாயைப் பூமியிலிருந்து ஆகாயமட்டும் பொருந்தும்படி திறந்துகொண்டு வழிமறித்தாள். அப்போது வானர வீரரான அநுமந்தர் விசுவரூபமெடுத்துக் காட்டி "இதற்கு உன்வாயாகிற வழி போதாதே" என்று சொல்லி, உடனே வாமனரூபியாய் அவள் வயிற்றுக்குள் நுழைந்து மூச்சுவிடுவதற்குள் அவ்வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளிப்பட்டார். அரக்கியும் எமலோகஞ் சென்றாள். பிறகு அவ்வுத்தமர் அதிவேகமாகத் தமது பிரயாணத்தைக் கவனிக்கலானார்.

வூக்கத்தோடு இப்படியவர் போய்க்கொண்டிருக்கையில் அங்காரதாரை என்பாளொருத்தி எதிர்ப்பட்டாள். இவள் ஆலகாலவிஷத்துக்குச் சமானமானவள்; வரபலமுடையவள்; மகாபாவி; அஞ்சா நெஞ்சு படைத்தவள். இவளை ஆஞ்சநேயர் பார்த்து "அடி! நீயார்? பெண்பாலாயிருந்தும் குறுக்கிட்டு நிற்கிறாய்! வீணாயுன் ஆவியை என் இழக்கத்துணிகிறாய்? வழிவிடு. நான் விரைந்து போகவேண்டும்" என்று கூறினார். அவள் இவ்வசனங்களைக் கேட்டுச் சிரித்தாள்; "ஆழமறியாது காலிட்டுக்கொண்ட நீயா என்னை அவமதித்துப்பேசுபவன். என் வாய்க்கு நீ எம்மாத்திரம்" என்று அட்டகாசஞ்செய்தாள். அவளை வாதாத்மஜர் அநாயாசமாக எதிர்த்துக் கொன்று செல்வாராயினர்.

(வரும்)

ஹாஸ்யம்

ஜானகி என்கிற பெண் தன் தந்தையிடம் வந்து "அப்பா, அடுத்தவீட்டு ராமு என்னை அடிக்கடி பார்க்கிறான் அவன் மிகவும் கெட்டவனாக இருக்கிறான். நீர் அவனைக் கண்டிக்க வேண்டும்" என்றாள்.

தகப்பனார் — அம்மா, ஜானகி நீ சொல்வது சரிதான். நீ அவனைப் பார்த்தாயோ இல்லையோ?—என்று கேட்டார்.

ஜானகி—நான் பார்க்கவே இல்லை அப்பா. அவன் தான் என்னை அடிக்கடி விரைக்க விரைக்கப் பார்த்தான்.

தகப்பனார்—நீ சொல்வது வேடிக்கையாக இருக்கிறதே. நீ அவனைப் பார்க்காமல் அவன் உன்னைப்பார்த்தது உனக்கு எப்படித் தெரிந்தது?—என்றுகேட்டார்.

இப்படிக் கேட்டதும் ஜானகிக்கு வெட்கமுண்டாய் விட்டது. உடனே மறுமொழி யொன்றும் சொல்லாமல் உள்ளே போய்விட்டாள்.

சத்தியம் தலைகாக்கும்

பல வருடங்களுக்கு முன்னர் வட அமெரிக்கா கண்டத்திலுள்ள ஐக்கிய மாகாணத்தில் தனிகர் ஒருவர் இருந்தார். அவருக்குச் செடிகொடி முதலியவைகளை வைத்து வளர்ப்பதில் அதிகப் பிரியமுண்டு. ஆதலின், அவர் தம் வீட்டின் பின்புறத்தில் தோட்ட மொன் றமைத்து, அதில் அழகிய பல புட்பச் செடிகளை வைத்து, அவற்றிற்கு எரு ஊட்டி, காலையிலும் மாலை யிலும் தண்ணீர் ஊற்றி அவற்றைப் பராமரித்து வந்தார்.

இப்பிரபுவுக்கு வாஷிங்டன் என்னும் பெயர்பூண்ட சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் தன் இளமைப் பருவமுதற்கொண்டே பெரியோரிடத்து அன்பும்பணிவு முடையவனாய் நடந்துவந்தான்.

ஒருசமயம் கிறிஸ்துமஸ் பண்டிகையன்று, இவ னுக்கு இவன்தகப்பனார் வேலைப்பாடமைந்த அழகிய கைப்பிடியோடு கூடிய கத்தி யொன்றைப் பரிசாகஅளித் தார். கத்தியைப் பெற்ற சிறுவனும் அடங்காமகிழ்ச்சி கொண்டு அதனைச் சிறிதுநேரம் உற்றுப்பார்த்துக்கொண் டிருந்தான். அப்பொழுது அவன் மனதில் அக்கத்தி யின் கூர்மையைக் கண்டறியவேண்டுமென்னும் அவா உதித்து உடனே அவன் தன்வீட்டின் பின்புறத்திலுள்ள தோட்டத்திற்குள் சென்றான். அங்கிருந்த அழகிய ரோஜாச் செடியொன்று இவன் மனதைக் கவர்ந்தது.

சிறுவன் அதையணுகி, அதன் கிளையொன்றைத் தன் கத்தியால் வெட்டினுன். கத்தி அதிகக் கூர்மையாக இருந்தமையால் கிளையும் உடனே வெட்டுண்டது. அது கண்ட வர்ஷிங்டன் தன் கத்தியின் கூர்மையை வெகுவாக மெச்சிப் பின்பு தன் வீட்டிற்குச் சென்றுன்.

ஐயோபாவம்! சிறுவன், தன் தகப்பனுர் அச்செடியைத் தன் உரினும் இனிதாக மதித்து வந்தாரென்பதைச் சிறிதேனும் அறியான் போலும்.

இஃதிவ்வாறுக அதுகாறும் வெளியே சென்றிருந்த அவன் தகப்பனுர் வீட்டிற்குத் திரும்பிவந்தார். பின்பு வழக்கம்போல் செடிகளுக்குத் தண்ணீர்வார்க்கும் நிமித்தம் தோட்டத்திற்குள் நுழைந்தார். அங்கு கிளையொன்று வெட்டுண்டு இருந்த ரோஜாச் செடியைக்கண்டார். கண்டதும் அவர்மனம் பதைத்தது. கண்கள் சிவந்தன. அவரது வதனம் துக்கம் கோபம் ஆகிய இவ்விரண்டையும் ஒருங்கே தோற்றுவித்தது. சிறிதுநேரம் செய்வதின்னது என்றறியாமல் திகைத்தார். பின்னர் ஒருவாறு தேறி அவர் தம்மகனைக் கூப்பிட்டார். வாஷிங்டனும், உடனே தன் தந்தை முன்தோன்றி அவரை வணங்கி நின்றுன். பிரபுவும் தன் தனயனை யழைத்து "பிள்ளாய் இதோ இந்த ரோஜாச் செடியின் கிளையொன்று வெட்டுண்டு கிடக்கிறதே. இதை வெட்டியதுயாரென்று உனக்குத்தெரியுமா?" என்று ஒருவிதக் கோபக்குரலில் கேட்டார்.

இதைச் செவியுற்ற வாஷிங்டன், இடியோசை கேட்ட நாகம்போல் ஆனுன். எனினும், அவன், உண்மையைக் கூறுவதே தனது கடமையெனத் தேர்ந்து, தன் தந்தையைநோக்கி, "அப்பா அந்தக் கிளையை அவ்வாறு சேதித்தது நான்தான். அதன் அருமையை அறியாமல் அவ்வாறு செய்துவிட்டேன் மன்னிக்கவேண்டும்" என்று பச்சாதாபப் பட்டுக் கூறினுன்.

மேற்கூறிய வார்த்தைகளைக் கேட்டபிரபுவினது முகத்தில் திடீரென ஒருவிதமாறுதல் ஏற்பட்டது. அது அவரது மனத்தெழுந்த சந்தோஷத்தையே எடுத்துக் காட்டிற்று. அதுவரையில் அவருக்கு ஏற்பட்டிருந்த துக்கமும் கோபமும் இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடிப் போயின. பிரபு தம்புதல்வனை அருகழைத்துத் தமது இருகரங்களாலும் மார்புறத் தழுவிப்பின் அவனைநோக்கி "அப்பா குழந்தாய், நீ இப்பொழுது கூறிய இந்த ஓர் உண்மைக்காக இன்னும் அநேகசெடிகளை இழக்கவும் சித்தமாயிருக்கிறேன். நீ எப்பொழுதும் இம்மாதிரி உண்மைபேசி வருவாயாயின் மேன்மை அடைவா யென்பது திண்ணம்" என்று வெகு அன்போடு கூறினர்.

இவ்வார்த்தை பயனற்ற சொல்லாகமாருமல் பின் கூறியவாறு, நாளடைவில் கைகண்டகாரியமாகவே முடிந்தது. வாஷிங்டன் தன் பிற்காலத்தில் இராணுவத்தில் சேர்ந்து படைத்தலைவன் உத்தியோகம் பெற்று, அச்சமயம் சுதந்தரத்திற்காக முட்டுப்பட்டுக் கொண்டிருந்த தன் நாட்டாருக்குத் தான் பெரிதும் உதவிபுரிந்து அவர்களது சுதந்தரத்தைமீட்டான். பின் அவ்வாறு சுதந்தரம் பெற்ற தன் நாட்டிற்குப் பிரதிநிதியாக நியமிக்கப் பெற்று ஜனங்களுக்கு நன்மை பலபுரிந்து வெகு காலம் வாழ்ந்து வந்தான்.

எனவே, பிள்ளைகாள்! உண்மை பேசுவதினல் உண்டாகும் உயர்வை எண்ணிப் பாருங்கள். அது அளவு கடந்ததாயிருக்கிறது. ஒருவன் உண்மை பேசுவதினல் முதலில் தனக்குத் துன்பத்தை வருவித்துக் கொள்வதாகத் தோன்றினும் முடிவில் இன்பத்தையே அடைவான் என்பது திண்ணம். ஆதலின் நீவிர் எப்பொழுதும் உண்மையைக் கைவிடாதீர்கள். அது உங்களுக்கு எல்லாவித நன்மைகளையும் பயக்கும் என்பதை அறிவீர்களாக.

க. வ. திருமாலாச்சாரி

யுக்திவசனம்.

மாமியார் வீட்டில் மருமகன் சாப்பிடும்போது கூட இருந்து கறிவகைகளை ருசி பார்த்த தோழன்,

"கரிக்காய் பொரித்தாள் கன்னிக்காய் தீய்த்தாள்
பரிக்காயைப் பச்சடியாய்ப் பண்ணுள்—உருக்கமுள்ள
அப்பைக்காய் நெய்துவட்டல் ஆக்கினுள் அத்தைமகள்
உப்புக்காண் சீ சீ யுமி"— (காளமேகம்)

என்றுன். இதன் கருத்து;—கரி என்றுல் யானை; இதற்கு 'அத்தி' என்றும் ஒரு பெயர். ஆகவே 'கரிக்காய்' என்பது 'அத்திக்காய்' என்றபடியாம்.

கன்னி-தெய்வப் பெண்; இது 'அரம்பை என்கிற' ஒரு தேவதாஸ்திரீயை யுணர்த்தும். அரம்பை என்பது வாழைக்கு ஒரு பெயர். ஆகவே கன்னிக்காய்—வாழைக்காயை யுணர்த்திற்று. பரி-குதிரை; இதற்கு 'மா' என்ற பெயருண்டு. ஆகவே பரிக்காய் என்பது மாங்காயாம்.

அப்பைக்காய்:—அ-அந்த, பை-பாம்பு. எனவே அந்தப் பாம்புக்காய் என்றுயிற்று. பாம்பு இங்கு கத்தரிப் பாம்பாம்-ஆகவே அந்தக் கத்தரிக்காய் என நின்றது.

தோழன் மாப்பிள்ளையைப் பார்த்து "உன் அத்தை மகள் அத்திக்காயைப் பொரித்தாள்; வாழைக்காயை வறுத்தாள்; மாங்காயைப் பச்சடி செய்தாள்; அந்தக் கத்தரிக்காயை நெய் துவட்டல் ஆக்கினுள்; எல்லாம் சரியே; ஆனுல் உப்பு அதிகம். அதனுல் அந்தக் கறிவகைகளை உண்ணுமல் உமிழ்ந்து விடு" என்றுனும்.

பட்டினத்துப்பிள்ளையார் சரித்திரம்

பிள்ளையாரின் திருவவதாரம்.

நீர்வளம் நிலவளமலிந்த சோழ நாட்டில் காவிரிப்பூம் பட்டினமென்றொரு பட்டினமுண்டு. அது தேவரும் முனிவரும் விரும்பத்தக்க திருநகரம். அப்படிப்பட்ட அழகும் வளப்பமும் வாய்ந்த அது, திருவெண்காடென்னும் சிவஸ்தலத்திற்கு அருகேயுள்ளது. இந்நகரில் சிவநேசர் என்னும் அழகிய பெயர்கொண்ட வைசியரொருவரிருந்தார். அவர் பெரும்பொருள் தேடிப் பிரபல வியாபாரியாயிருந்தார். அவரிடத்தில் அறிவு, அன்பு, அடக்கம், சிவபக்தி, அடியார் பக்தி, குருபக்தி முதலிய உத்தமகுணங்கள் குடிகொண்டிருந்தன. மகாசிவபக்தரானதினால் அவரிடத்தில் எல்லோரையும் அன்போடு ஆதரிக்கும் அரியதொரு குணமும் பிரகாசித்தது.

சிவநேசருக்கு ஞானகலாம்பை என்றொரு மனைவியிருந்தாள். அவ்வம்மை திருமகள் விரும்பும் அழகும் கலைமகள் விரும்பும் அறிவும் வாய்க்கப்பெற்று மலைமகளின் (பார்வதி) திருவருட் செல்வத்திற் சிறந்து தருமநெறி தவறாத பதிவிரதா சிரோமணியாய் விளங்கினாள்.

எல்லோரும் அந்த மாதரசியை, "இந்தமாது புகுந்த வீடும் பிறந்த வீடும் விளங்கவந்த உத்தமி" என்று புகழ்வார்கள்.

சிவநேசர், ஞானகலாம்பை என்னும் அந்தக்கற்புக் கரசியின் அருந்துணைகொண்டு தேவர் பூசை, பிதிர்க் கடன், விருந்துபசரித்தல், பல உயிர்களையும் காத்தல், பழமறை பயிலுதல் முதலிய ஐந்துவகையான வேள்வி களையும் தவறாமல் நாள்தோறும் புரிந்து இல்லறம் நடத்தி வந்தார். அவர்கட்கு ஒரே ஒரு பெண்குழந்தை மாத்திரம் பிறந்திருந்தது. ஆண் குழந்தையில்லாமை யால் அவர்கள், "அந்தோ, இம்மை மறுமை என்னும் இருவகை இன்பத்திற்குங் காரணமான ஆண்மக்கட்பேறு நமக்கு வாய்த்திலதே" என்றெண்ணி மிக வருத்த முற்று அரிய விரத மிருந்து வந்தனர்.

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற" என்று அந்த மக்கட் பேற்

றைத் தமிழ்வேதம் சிறப்பித்துக் கூறுகிறதல்லவா? எல்லா மிருந்தும் அந்தச் செல்வமில்லாதது அவர்கட்குப் பெருங்குறையா யிருந்தமையினால் அவர்கள், பல புண் ணிய தீர்த்தங்களுக்கு யாத்திரை போய் ஸ்நானஞ் செய் தனர்; தரை மெழுகியுண்டு தவம்பல புரிந்தனர்; புழுதி படப் படுத்திருந்து சகல சுகத்தையும் கருதாது விட் டிருந்தனர்; பட்டினி பல கிடந்தனர்; மாதவரையும் ஆது லரையும் ஆதரித்துத் தேவாராதனை புரிந்துவந்தனர்; தானம்பல புரிந்தனர்; சிவ கதை கேட்பதும் கேட்பிப் பதும் படிப்பதுமாய்ப் பொழுது கழித்தனர்.

இவ்வாறு தவங்கிடந்து வருகையில் சிவபெருமா னுடைய திருவருளினால், ஞானகலாம்பை கர்ப்பமடைந்

தாள். அதனைக் கேள்விப்பட்ட உறவினரும், நட்பினரும் அயலாரும் பிறரும் கார்மேகத்தைக்கண்ட கலாப மயில்போல் களிப்படைந்தனர். புத்திரப்பேறு வேண்டிய இவ்விருவரேயன்றி ஊரிலுள்ளவர்களிலே பலரும் நல்ல கனவுகள் கண்டனர்; இழந்த பொருளை மீண்டுமடையப்பெற்றனர்; சிறு முயற்சியினால் பெரும்பயனை யடைந்தனர். நீண்ட நாளாய்ப் பகைமைகொண்டு பிரிந்திருந்தவர்களும் ஒன்றுகூடி நட்புக்கொண்டனர். அநேகர்க்குத் தம்மையறியாமலே சிவத்யான முண்டாயிற்று; புண்ணியச் செய்கைகளில் இச்சை யுண்டாயிற்று.

இப்படிப்பட்ட நல்லகுறிகள் கண்டு எல்லோரும் நன்மைவிளைவதுண்டு என்று மகிழ்ச்சிகொண்டனர். சிவநேசரும் ஈசன் திருவருளை யெண்ணி மகிழ்ந்து, ஞானகலாம்பைக்கு தக்க காலத்தில் பும்ஸவனம், ஸ்ரீமந்தம் முதலிய சடங்குகளைச் செய்து முடித்தனர். மாசமாக ஆக ஞானகலாம்பையினுடைய மேனி வெளுத்து எங்கும் பச்சை நரம்போடியது. கண்பசந்து குழிந்தது. மயக்கமும் பொய்த்துயிலு முண்டாயின. பல தின்பண்டங்களிலே இச்சை யுண்டாயிற்று. கற்புக்கரசியாகிய அவ்வம்மை எப்பொழுதும் சிவபெருமானையே சிந்தித்தவளாய்ப் பெரு மகிழ்ச்சியுடனிருந்தாள்.

இவ்வாறு பத்துமாசஞ் சென்றதும் ஞானகலாம்பை ஒரு நல்லநாளில் வலம்புரிச் சங்கம் நல்ல முத்தினைப் பெற்றதுபோல ஒருபுத்திர ரத்தினத்தைப் பெற்றெடுத்தாள். அன்றையதினம் திதிவார நக்ஷத்திரயோக கரணங்களெல்லாம் சுபமாக அமைந்திருந்தன. ஐந்து கிரகங்கள் உச்சமாயிருந்தன. குழந்தைபிறந்ததும் தேவ

துந்துபி முழங்கியது. தேவர்கள் பூமழைபொழிந்து மகிழ்ந்தனர். மனோகரமாகத் தென்றற் காற்று வீசியது. ஆகாயம் நிர்மலமாகவிருந்தது. குளம், கிணறு, தடாகம் முதலிய நீர் நிலைகளெல்லாம் தெளிவடைந்து பரமானந்த மடைந்த யோகியர்போல் சலனமற்றிருந்தன. எல்லோருக்கும் என்று முண்டாகாத உள்ளக்கிளர்ச்சியுண்டாயிற்று. சிவநேசச் செல்வர்களுடைய சித்தத்தில் சிவாநந்தம் பொங்கிப்பெருகியது. இதனால் யாவரும் பெருமானைத் துதித்துக் குழந்தையை வாழ்த்தி உற்சவங் கொண்டாடினர்.

உலகமெல்லாம் சிவநேசமடைந்து உய்யும்வழியிலே செல்லத்தக்க நல்லறிவைப் புகட்டக்கூடிய உத்தம புத்திரனைப் பெற்ற சிவநேசர் உடனே காவிரியாற்றுக்குச் சென்று நீராடி வீடுவந்து வேதியர்களை அழைப்பித்து விதைவழங்கினர்; தானம் பல செய்தனர்; பந்து ஜனங்களுக்கும் ஊராருக்கும் பழம் பாக்குவெற்றிலை, கற்கண்டு முதலியன கொடுத்தனர். தேவாலயத்தில் சிவபெருமானுக்கு அபிஷேகம் ஆராதனைகள் செய்வித்தனர். ஏழை எளியவர்க்கேயன்றி யாவர்க்கும் திருப்திகரமாய்ப் போஜனம் செய்வித்தனர். அப்பால் சோதிடரைவரவழைத்துக் குழந்தைக்கு ஜாதகருமம் செய்வித்து வீட்டுத் தெய்வங் கொண்டாடினர்.

இப்படியாக இன்னும் என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளை யெல்லாம் செய்து புத்திரப்பேற்றுத் திருவிழாக் கொண்டாடிமகிழ்ந்தார். அப்பால் பதினோராவது நாள் ஞானகலாம்பைக்கும் குழந்தைக்கும் ஸ்நானஞ் செய்வித்துத் தாமும் நீராடிப் பந்துக்கள் ஊரினர் யாவரை

யும் வரவழைத்து வேதியரைக் கொண்டு புண்யாவாசகம் செய்வித்தார்; பிறகு குழந்தைக்குத் திருவெண்காடர் எனத் திவ்யதிருநாமம் சூட்டியருளினர்.

அப்பால் குழந்தை சுக்கிலபக்ஷத்துச் சந்திரனைப் போல் வளர்ந்துவந்தது; அழுதும் நகைத்தும் கையூன்றிக் காலுதைத்து ஆடியும் கவிழ்ந்தும் தவழ்ந்தும் நகர்ந்தும் செங்கீரையாடியும் சப்பாணி கொட்டியும் அன்னையின் முகம் பார்த்துப் புன்னகைபுரிந்தும் ஈன்றோர்க்கேயன்றி எல்லோருக்கும் இன்பமளித்தது. சிவநேசச் செல்வர் குழந்தைக்கு அந்தந்த மாசத்தில் செய்யவேண்டிய சடங்குகளைத் தவறாமற் செய்து ஆறாவதுமாதத்தில் அன்னப் பிராசனம் செய்வித்தார்.

பின்னர் குழந்தை தவழும் பருவங்கடந்து தளர் நடையிடும் பருவமடைந்தது. குழந்தைக்கு நெற்றியில் சூழியம் என்கிற சுட்டியும் செவியிற் குதம்பையென்கிற செவியணியும், மார்பில் மதாணி முத்தாரங்களும் கையிலே கடகமும் அரையில் அரைஞாணுடன் சதங்கையும் காலிலே காப்பு கொலுசு சதங்கைகளும் பூட்டிப் பார்த்து ஈன்றோர் ஆநந்தமடைந்தனர்.

குழந்தை தளர்நடையிட்டு நடந்தோடியது; அப்பால் தெருவிலே சிறுதேருருட்டியது; சிற்றிலழித்துச் சில குறும்பு செய்து மகிழ்ந்தது; தாய்தந்தையர் மேல் விழுந்து கொஞ்சிவிளையாடி அவர்கட்கு இன்பம்விளைத்தது. குழந்தை வளர வளர அதனுடன் அன்பு, அறிவு, அடக்கம், ஆசாரம், நிராசை, ஸத்தியம், தயை, சிவபக்தி முதலிய உத்தமமான குணங்களெல்லாம் உடன் வளர்ந்து வந்தன. (வரும்.)

ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு

ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு மூன்று குமாரர்கள். அவனுடைய குடிகள் ஒருநாள் அவனிடத்தில் வந்து "பிரபுவே தங்கள் ராஜ்யத்தில் திருடர்களும் கொள்ளைக் காரர்களும் அதிகமாய் விட்டார்கள். இந்தத் திருடர்களைப் பிடித்து எங்களை ரக்ஷிக்கும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்" என்று முறையிட்டார்கள். அரசனும் தன் புத்திரர்களைக் கூப்பிட்டு "அப்பா பிள்ளைகளே, எனக்கோ வயதாய் விட்டது. நீங்கள் இளமைப் பருவத்துடன் இருக்கிறீர்கள், நம்முடைய ராஜ்யத்தில் இப்படித்திருட்டு நடப்பது நமக்கு அகௌரவம் அல்லவா? ஆகையால் அந்தத் திருடர்களையும் கொள்ளைக் கூட்டத்தாரையும் பிடித்துக்கொடுத்து இந்தக் குடிகளை ரக்ஷிக்க உங்களுக்கு கட்டளையிடுகிறேன்" என்றான்.

அதன்படியே இந்த மூன்று ராஜகுமாரர்களும் இரவெல்லாம் ஊர் சுற்றித்திருடர்களைக் கண்டு பிடிப்பது என்று தீர்மானித்துக்கொண்டார்கள். இந்த எண்ணத்துடன் பட்டணத்தின் ஓர் எல்லையில் மூவரும் ஒரு ஜாகை ஏற்படுத்திக்கொண்டார்கள். மூத்த இராஜகுமாரன் சரியாய் இரவு ஒன்பது மணிக்குத் தன் குதிரையின் பேரில் ஏறி ஊர் சுற்றினான்; ஆனால் ஒரு திரு

டனும் கண்ணில் தென்படாததால் இரவு 12-மணிக்கு ஜாகைக்குத்திரும்பினன். இரண்டாவது ராஜகுமாரனும் அதேமாதிரி புறப்பட்டு ஒன்றும் பிரயோஜனப்படாமல் இரவு இரண்டுமணிக்கு வந்து சேர்ந்தான். அதற்கு மேல் மூன்றாவது ராஜகுமாரன் புறப்பட்டுத் திருடரைப் பிடிப்பதற்காகச் சுற்றிவரும் வேளையில் தன் பிதாவின் அரண்மனை வழியாய் வந்துகொண்டிருக்கையில் அரண்மனையிலிருந்து ஓர் அழகியஸ்திரீ வெளியில் வருவதைக் கண்டான். உடனே குதிரையை வேகமாய் நடத்தி அவள் வெளியில் போவதைத் தடுத்து "நீயார், இங்கு எங்கு செல்கிறாய்" என்றான். அதற்கு அவள், "நான்தான் இராஜ்ய லக்ஷ்மி. இந்த அரண்மனையின் குலதெய்வம். அரசன் இன்று இரவு கொலையுண்பான். இனிமேல் இங்கு இருப்பதில் பிரயோஜனமில்லை யாகையால் வெளியில் செல்கிறேன்" என்றாள். அதற்கு இராஜகுமாரன் அவளை மிகவும் பணிந்து வணங்கி "ஒருவேளை அரசன் கொலைக்குத் தப்பினால் தங்களுக்குத் திரும்பி இங்கேயே இருப்பதில் ஆக்ஷேபனையில்லையே" என்று பக்தியுடன் வினவினான். "இல்லை" என்றுஅவள் பதிலளித்ததும், தான் எப்படியாவது அரசனைப் பாதுகாப்பதா யுறுதிகூறி அவளைத் திரும்பி அரண்மனைக்குள் போகும்படி அவன் மிகவும் பணிந்து வேண்டிக் கொண்டதின் பேரில் அவளும் சந்தோஷப்பட்டுத் திரும்பவும் அரண்மனைக்குள் நுழைந்துமறைந்துவிட்டாள்.

இராஜ்குமாரனும் அரண்மனைக்குள் நுழைந்து நேராக அந்தப்புரம் சென்று அரசன் சயனக்ருஹத்திற்குள் நுழைந்தான். அரசன் அம்ஸதூளிகாமஞ்சத்

தில் சயனித்து நன்றாய்த் தூங்கிக்கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் மற்றொருகட்டிலில் அரசனுடைய இளையமனைவியும் தனக்கு மாற்றாந்தாயுமான ஒருஸ்திரீயும் நித்திரையிலிருந்தாள். ஒரு விளக்கு மந்தமாய் எரிந்துகொண்டிருந்தது. இராஜகுமாரன் அறையை உற்றுநோக்கவே அரசன் கட்டிலைச் சுற்றி ஒரு பெரிய க்ருஷ்ண ஸர்ப்பம் வேகமாய் ஓடிக்கொண்டிருக்கக் கண்டு திடுக்கிட்டுத் தன் உறையிலிருந்து பட்டாக் கத்தியை எடுத்து அந்தப்பாம்பை இரண்டு துண்டாக வெட்டிப் போட்டான். அதோடு நில்லாமல் அப்பாம்பை நூறுதுண்டாய் வெட்டி அருகிலிருக்கும் ஒருதட்டில் அவைகளைவைத்தான். அவன் அப்படிச் செய்யும்போது ஒருதுளிரத்தம் அருகில் சயனித்திருந்த ராணியின் மார்பில் விழுந்தது. இதைக்கண்டதும் இராஜகுமாரனுக்குத் துக்கம் அதிகரித்தது. "அடடா, தந்தையைக் காப்பாற்றித்தாயைக் கொல்கிறேனே" என்று வருத்தப் பட்டு என்னசெய்வது என்று யோசித்து, தன் நாக்கை சுற்றிலும் ஒரு மெல்லிய துணியால் ஏழுதரம் சுற்றிக் கொண்டு மெதுவாக அந்தத்துணியின் நுனியால் அவள் மார்பில் விழுந்த இரத்தத்துளியை நக்கினான். அவன் இப்படிச் செய்யும்பொழுது அந்த ராணி விழித்துக் கொண்டு தன்னைத்தொடுகிறது யார் என்று பார்க்க இளைய குமாரனாயிருக்கக்கண்டு திடுக்கிட்டாள். அரசகுமாரனும் இதைக்கண்டு பயந்து அவ்வறையிலிருந்து சரேலென்று வெளிப்பட்டுத் தன் ஜாகைக்குச் சென்று ஒருவருக்கும் சொல்லாமல் துக்கத்துடன் படுத்துக் கொண்டான்.

நிற்க, இந்தராணிக்கு இளையகுமாரன் பேரில் எப்பொழுதும் வெறுப்பு அதிகம். அதனல் அவனைத் தொலைக்க வெண்ணி, தூங்கிக்கொண்டிருக்கும் அரசனை எழுப்பி, "பிராணநாதா, ஐயோ, நான் என்ன சொல்லுவேன். என் ஹிருதயம் துடிக்கிறதே" என்று கதறினள். அரசன் சரேலென்று எழுந்து உட்கார்ந்து "என்ன நடந்தது?" என்று ஆவலுடன் வினவினன். "ஐயோ, உங்கள் மூன்ருவது பிள்ளையைப்பற்றி ஜாஸ்தியாய் நீங்கள் புகழ்ந்தீர்களே. பாவி, அவன் இப்பொழுது இங்கிருந்தான். என் மார்பை யாரோ தொட்டதுதெரிய நான் விழித்துக்கொண்டேன். அவனுயிருக்கக்கண்டேன். நான் விழித்ததைக்கண்டதும் அவன் ஓடிவிட்டான். அந்தப்பாவி எந்தக்கெட்ட எண்ணத்துடன் இங்கு வந்தானே? இவன்தான் தங்கள் செல்வப்பிள்ளையோ?" என்று அழுதாள். அரசனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவளிடத்தில் வைத்திருக்கும் ஆசையினல் அவள் சொல்கிற ஒவ்வொரு சொல்லையும் நம்பினன்.

விடியற்காலையில் அரசன் எழுந்து காலைக்கடனை முடித்து விட்டுத் தன்னுடைய மூத்தகுமாரனை வரவழைத்து "நான் மிகுந்த கண்யமும், அபிமானமும் ஒருவனிடத்தில் வைத்து அவனிடத்தில் என் உயிரையே நம்பியிருக்கையில், அவன் என்னிடத்தில் விசுவாசமாயிராமல் த்ரோஹம் செய்தால் அவனுக்கு எத்தகைய தண்டனை விதிக்கவேண்டும்" என்று ஆத்திரத்துடன் கேட்டான். மூத்த இராஜகுமாரனும் இதில் ஏதோ விஷய மிருக்கவேண்டு மென்று நினைத்து "கட்டாயம் அவன் தலையை வெட்டிவிடவேண்டும். ஆனல் அப்படிச்

செய்வதன்முன்பு அவன்நிச்சயமாய்த்ரோஹம் செய்தானு என்று தீரவிசாரித்தே செய்யவேண்டும்" என்றான். "அதெப்படி" என்று அரசன் வினவ "தந்தையே பின் வரும் கதையைக் கேளுங்கள்" என்றான்.

கதை

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் ஒரு தட்டான் இருந்தான். அவனுக்குப் புத்திரன் ஒருவ னிருந்தான். அப்புத்திரனுக்கு ஒருமனைவியுண்டு. அவளுக்கு மிருகங் களின் பாஷை நன்றாய்த்தெரியும். ஆனால் அவளுக்கு அப்பாஷை தெரியு மென்று வீட்டில் ஒருவருக்கும் தெரி யாது. அவர்கள் வீடு காவேரிக்கரையோரமாயிருந்தது. ஒருநாள் இரவு அவள் தன் புருஷனுடன் சயனித்துக் கொண்டிருக்கும் பொழுது காவேரிக் கரையில் ஒரு நரி ஊளையிடுவதைக் கேட்டாள். "அதோ ஆற்றோரமாய் ஒரு பிணம் மிதந்து செல்கிறதே, யாராவது அதைக் கரைக்கு இழுத்து அதன் கையிலிருக்கும் வைர மோதி ரத்தைக் கழற்றிக்கொண்டு எனக்கு அதை ஆகாரத்திற் குக்கொடுக்க மாட்டார்களா?" என்று ஊளையிட்டது.

இதை அறிந்த அந்த ஸ்திரீ உடனே படுக்கையை விட்டு எழுந்திருந்து ஆற்றங்கரைக்குச் சென்றாள். விழித் துக் கொண்டிருந்த கணவனும் அவளுக்குத் தெரியாமல் பின் தொடர்ந்தான். அந்த ஸ்திரீயும் ஜலத்தில் இறங்கிப் பிணத்தைக் கரைக்கு இழுத்து மோதிரத்தைப் பலவிதத் தில் கழற்றிப் பார்த்தும் முடியாமையால், சுற்றுப் பக்கம் எல்லாம் திரும்பிப் பார்த்து ஒருவரும் இல்லாதது கண்டு அம்மோதிர விரலை அப்படியே வெடுக்கென்று கடித்து மோதிரத்தை எடுத்துக் கொண்டு சவத்தை அங்கேயே

போட்டுவிட்டு வீடுதிரும்பினள். இதையெல்லாம் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த, அவள் கணவன் அவளை யாரோ ராக்ஷஸியெனப்பயந்து அவளுக்குமுன் னல் வீடுவந்து சேர்ந்து படுத்துக் கொண்டு தூங்குவது போல் பாசாங்கு செய்தான். இரவெல்லாம் கஷ்டத்துட னும் பயத்துடனும் படுத்திருந்து மறுநாள் காலையில் தன் தகப்பனிடத்தில் வந்து "அப்பா தாங்கள் தீரவிசாரித் துப் பொறுக்கி எனக்குக் கல்யாணம் செய்து வைத்தீர் களே அவள் மானிடஸ்திரீயல்ல, அரக்கி. நேற்றிரவு ஆற் றங்கரையில் ஒருநரி ஊளையிட்டது, உடனே நான் தூங்கு கிறேன் என்று என் மனைவி நினைத்துப் படுக்கையிலிருந்து எழுந்து கதவைத் திறந்துகொண்டு வெளியில் போனள். நடு நிசியில் வெளியில் போவதைக் கண்டு ஆச்சரியப்பட்டு நானும் அவளுக்குத் தெரியாமல் பின்தொடர்ந்தேன். அவள் என்ன செய்தாள் தெரியுமா! சொல்வதற்குக் கூட என் நாக்கு நடுங்குகிறது. அவள் ஆற்றில் இறங்கி அங்கு மிதந்து கொண்டிருந்த ஒரு சவத்தைக் கரைக்கு இழுத்து அதை பக்ஷிக்கத் தொடங்கினள். நான் என் கண்ணுலேயே பார்த்தேன். பிறகு நான் பயந்துபோய் வீடுவந்து படுத்துக் கொண்டேன். சற்றுநேரத்திற்கெல் லாம் அவளும் வீட்டிற்குள் நுழைந்து கதவைத் தாளிட் டுக்கொண்டு படுத்துக் கொண்டாள். ஓ அப்பா! நான் எப் படி அவளுடன் ஜீவிக்கப் போகிறேன். எந்த இராத்திரி யில் என்னையே கொன்று தின்றுவிடுவாளோ?" என்று கதறினன்.

கிழத்தட்டானுக்கும் பெருந்திகில் உண்டாயிற்று. சற்றுநேரம் தகப்பனும் பிள்ளையும் யோஜித்து, மறுநாள்

அவளைக் காட்டிற்குக் கொண்டுபோய்த் துஷ்ட மிருகங்களுக்கு இரையாக விட்டுவிடுவது என்று தீர்மானித்தார்கள். அதன்படி மறுநாள் காலையில் புருஷன் தன்மனைவியைக் கூப்பிட்டு "இன்று சமையல் பண்ணவேண்டாம். கட்டுச்சாதம் பிசைந்துகொள். உன் பெற்றோர்களிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. உன்னைப்பார்க்கவேண்டுமென்று அவர்கள் மிகவும் ஆவலா யிருக்கிறார்களாம். ஆகையால் உன்னை அழைத்துக் கொண்டுபோவதாய்த் தீர்மானம்" என்றான். அவளுக்கும் பிறந்தகம்போகப் போகிறோம் என்ற சந்தோஷ முண்டானபடியால் அவள் அவசர அவசரமாய்ச் சாப்பிட்டுவிட்டுப் புறப்பட்டாள்.

அவர்கள் செல்லும்வழி மரமடர்ந்த காட்டிற்குள் சென்றது. அவர்கள் ஒருபுதரின் வழியாய்ச் செல்லும் பொழுது அங்குப் பதுங்கியிருந்த ஒரு ஸர்ப்பம் சீறிற்று. இவளுக்கு மிருக பாஷைதெரியுமாதலால், அந்தப் பாம்பு சொன்னதைக் கவனித்தாள். "ஓ வழிப்போக்கர்களே, அந்த மரத்தின் பொந்திலிருக்கும் தவளையைப் பிடித்து எனக்குப் பக்ஷிக்கக் கொடுங்கள். நீங்கள் அத் தவளையின்கீழ்ப் புதைக்கப் பட்டிருக்கும் பொக்கிஷத்தை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றது. இதைக்கேட்டதும் அந்தஸ்திரீ சரேலென்று தவளையைப் பிடித்துப் பாம்பினிடத்தில் எறிந்து தன் கணவனைக் கூப்பிட்டு "பிராணநாதா, இதோ இங்கே புதையல் இருக்கிறது. எடுத்துக் கொண்டு சுகப்படலாம்" என்றாள்.

அவள் புருஷனுக்கு இன்ன செய்வது என்று தோன்றாமல் அவள் காட்டின இடத்தை வெட்டி எடுக்க ஏராளமான வைரமும் சிகப்பும் அகப்பட்டன. இதைக்

கண்டதும் அவன் ஆச்சரியமும் திகிலுமடைந்தவனாய் "இதை எப்படி அறிந்தாய்?" என்றுகேட்க அவள் தனக்கு மிருகங்களின் பாஷை நன்றாய்த் தெரியுமென்று கூறி நேற்றிரவு நடந்தவைகளையும் இப்பொழுது நடந்த விஷயங்களையும் சொன்னாள். அவள் புருஷன் இவை யெல்லாம் கேட்டு அதிக சந்தோஷமடைந்து அவளை ஆலிங்கனம் பண்ணி "இவ்வளவு பணத்தையும் திரவியத் தையும் எடுத்துக்கொண்டு இந்தக் காட்டில் எப்படித் தனியாய்ப் போகிறது. நாம் திரும்பி வீட்டிற்குச் செல் வோம். இன்னும் இரண்டு நாள் கழித்து உன்பிறந்த வீட்டிற்குப் போகலாம்" என்று அவளுக்குச் சொல்லிச் குதூகலமனதுடன் திரும்பி அஸ்தமிக்கிற வேளையில் வீடுவந்து சேர்ந்தான். வீட்டையடைந்ததும் "நீ புழைக் கடைவழியாய் உள்ளேபோ. நான் வாசல் வழியாய் வந்து என்தகப்பனுக்கு எல்லாம் சொல்லி இந்தப் புதை யலையும் பத்திரப்படுத்துகிறேன்" என்றான். ஆகையால் அவள் புழைக்கடைவழியாய் வீட்டிற்குள் நுழைந்தாள். அதேசமயத்தில் அக்கிழத் தட்டான் ஏதோ காரியமாகக் கோடாலியை எடுத்துக்கொண்டு வீட்டிற்குள்ளிருந்து பின்பக்கம் வந்தான். இவளைக்கண்டதும் "இப்பேய் என் பிள்ளையைக் கொன்றுதின்று விட்டு என்னையும் அழிக்கவருகிறது" என்று எண்ணினவனாய்த் தன் கையி லிருந்த கோடாலியால் அவளை ஒரே வெட்டாய் வெட்டி எறிந்தான். இதற்குள் அவன் மகன் அவ்விடம் வந்து "எல்லாச்சங்கதிகளையும் சொல்ல இருவரும் பெருந்துயர மடைந்து அழுதார்கள். ஆகையினால் எதையும் தீரவிசா ரித்துப்பின் செய்ய வேண்டு" மென்று உணர்ந்தார்கள்.

பிறகு மகாராஜா, தன் இரண்டாவது பிள்ளையை வரவழைத்து அவனையும் இந்தமாதிரி கேள்விகேட்டான். அவனும் "ஆமாம் தலையை வாங்கிவிட வேண்டியதுதான். ஆனால் அப்படிச் செய்யுமுன் தீர ஆற விசாரிக்க வேண்டியது உங்களுடையகடைமை" என்றான். "அது எப்படி." என்று அரசன்கேட்கப் பின்வருமாறு சொல்லத்துடங்கினான்—

கதை II

முன்னொரு காலத்தில் ஓர் அரசனிருந்தான். அவனுக்கு எப்பொழுதும் வேட்டையாடுவதில் பிரியமதிகம். ஒருநாள் அவன் வேட்டையாடிக்கொண்டிருக்கும்பொழுது தன்கூட வந்தவர்களை விட்டுப்பிரிந்து அதிக தூரம் தன் குதிரையின்மேல் வந்து விட்டான். ஆகையால் இன்னது செய்வது என்று தெரியாமல் அந்தக் குதிரை மேல் நெடுந்தூரம் சவாரி செய்தும் ஒரு கிராமமாவது வீடாவது அவன் கண்ணில் தென்படவில்லை. அவனுக்குப்பசியும் தாகமும் அதிகரித்தன. ஒரு வாய்க்காலாவது குட்டையாவது அவன் வழியிலில்லை. அப்பொழுது ஒரு மரத்திலிருந்து ஏதோ ஜலம் சொட்டிக்கொண்டிருக்கக் கண்டான். மழைஜலமாகத் தான் இருக்கவேண்டுமென்று நினைத்து அதற்கு நேராகச் சென்று தன்னிடத்திலிருந்த ஒருமான் கொம்பில் அந்தஜலத்தை ஏந்தலானான். ஆனால் அது மழைஜலமல்ல. அம்மரத்தின் பேரில் ஒரு பெரிய நாகஸர்ப்பம் கோபத்தினால் சீறிக்கொண்டு தன் விஷப்பற்களால் மரத்தில் அடித்து மோதிக்கொண்டிருந்தது. அந்த விஷமானது பாம்பின்

வாயிலிருந்து கக்கப்பட்டுத் துளித்துளியாய் விழுந்து கொண்டிருந்தது. அரசன் அதை மழைஜல மென்று நினைத்து இருந்தபோதிலும் குதிரைக்கு நன்ருய்ப் புலப் பட்டது. அந்தக் கொம்பு நிறைய வந்தி அரசன் அதைக் குடிக்கப்போகும் சமயத்தில் அக்குதிரை அரசனைக் காக்க வெண்ணி அங்குமிங்கும் வெருண்டது, அதனுல் ஏற் பட்ட அதிர்ச்சியில் கொம்பிலிருந்த அத்தனை ஜலமும் கீழே கொட்டிவிட்டது. அரசனுக்குமுன்கோபம்பொங் கித்தன் கத்தியால் குதிரையை வீசக் குதிரை உடனே உயிர்விட்டது. அப்பொழுது அருகிலிருந்த ஒருகாக்கை அக்கொம்பைக் கொத்தினதும் துடித்துப்போய் உயிரை விட்டது. இதைக்கண்டதும் அரசன் ஆச்சர்யப்பட்டு மரத்தை நோக்கவே பாம்பைக்கண்டு தன்னைக் காப் பாற்றிய குதிரையின் சாவையும் தன் முன்கோபத்தையும் நினைத்து மிகவும் துக்கித்தான் ஆகையால், தந்தையே எதையும் தீரவிசாரிக்காமல் செய்யலாகாது" என்று இரண்டாவது இராஜ குமாரன் சொன்னுன்.

அதன்மேல் தன் மூன்ருவது புத்திரனைக் கூப்பிட்டு "நான் ஒருவனிடத்தில் என் உயிரையும் நம்பிக்கையும் வைத்திருக்க அவன் எனக்குத் தீங்கிழைத்தால் அவனை என்ன செய்கிறது" என்று கேட்டான். அதற்கந்த இரா ஜகுமாரன் "அப்பேர்ப்பட்டவன் தலையை வாங்கிவிட வேண்டியதுதான். ஆனுல் அப்படிச் செய்யுமுன் தீரவிசா ரித்துத் தான் செய்யவேண்டுமென்ருன். "அது எப்படி" என்று அரசன் கேட்க இராஜகுமாரன் சொல்லுகிருன்.

(வரும்.)

...ழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
186464
சென்னை-600 008

பாலவிநோதினி

வாழ்த்து

"வாசுதேவனே! வந்தாளு மெந்தனை"—என்றமெட்டு

வாழ்க வாழ்கவே—தினம்—வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே
இளமை யாயவன்—பொருள்—வளமை மேயவன்
எளிமைகண்டு இரங்குந்தன்மை யுடைய தூயவன்
நேசமார்ந்தவன்—தேசக்—கல்விதேர்ந்தவன்
ஆசாரம் நேர் பெறச் செய்திடும் அழகு வாய்ந்தவன்
வரகவி சுப்ர—மண்ய—பாரதித் தூயோன்
பெருமை தோன்ற யீன்ற பால விநோதி னியாமிவன்
கத்து கடலினால்—சூழும்—காசினி தன்னில்
மெத்தவும் பாலர்க் குழைத்து மேன்மை நாட்டுறான்
செல்லுமிடங்களில்—இவன்—ஒல்லுவகையினால்
பலவிதத்தும் தேசபாஷை தன்னைப் பெருக்குறான்
கல்விபெருகவே—மக்கள்—கவலை யறுகவே
பலவிதத்து முதவுமிவன் பண்பி லுயர்கவே.
கணபதி சுப்ர—மண்ய—கவிஞனாகுமென்
அணிமிகுந்த கவிதைகொண்டான் தினமும் வாழ்கவே
எங்கள் முருகனாம்—மு—குந்தன் மருகனால்
பொங்கித்ததும்பும் மங்களந்தான் எங்கும் தங்கவே.
வாழ்க வாழ்கவே—தினம்—வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே.

சுபம்!

சே. ரா. கணபதி சுப்ரமண்ய ஐயர்
தமிழ்ப் பண்டிதர்,—போர்டு ஹைஸ்கூல்,—கொள்ளேகாலம்.

PATRONS FOR BALAVINODINI

பாலவிநோதினியின் போஷகர்கள்

1. மகா-ள-ள-ஸ்ரீ—அ. கணபதி முதலியார் அவர்கள், ஜமீன்தார், அரசூர்.

2. மகா-ள-ள-ஸ்ரீ,—ஏ. ரெங்கநாத ஐயர் அவர்கள் மிராசுதார், நங்கவரம், திருச்சி.

3. மகா-ள-ள-ஸ்ரீ,—M. R. சேதுரெத்னமையர் அவர்கள், மிராசுதார், மணத்தட்டை, குளித்தலை, திருச்சி.

LIFE SUBSCRIBERS

ஜீவிய சந்தாதாரர்கள்

1. மகா-ள-ள-ஸ்ரீ—கே. அ. கணபதி ஐயர் அவர்கள் பி. ஏ., சூபரின்டெண்டெண்டு, கவர்மெண்டு செக்ரெடேரியேட், கோட்டை.

வைஸ் பிரெசிடெண்டு, ஜெயவிலாச சபை-குமாரபுரம்-சென்னை.

2. மகா-ள-ள-ஸ்ரீ—லெ. நடராஜன் செட்டியார் அவர்கள், A. R. L. House, தேவகோட்டை.

3. மகா-ள-ள-ஸ்ரீ—பி. குழந்தைவேலு முதலியார் அவர்கள், Accountant and Secretary, Messrs. Walker & Co., Ltd, Madras. கௌரவ காரியதரிசி, ஜெயவிலாச சபை-குமாரபுரம், சென்னை.

4. மகா-ள-ள-ஸ்ரீ—M. B. பூரன்ஸிங், கண்டக்டர், ஜெயவிலாச சபை, சென்னை.

5. மகா-ள-ள-ஸ்ரீ—N.M. சபாபதி பிள்ளை அவர்கள் Superintendent, Kodanad Tea Estate, Kodanad, Nilgiris.

ஜீவிய சந்தா ரூ. 15—0—0

குறிப்பு:—இதைக்கண்ணுறும் நமது சந்தாதாரர்களும் மற்றும் கனதனவான்களும் போஷகராகவாவது ஜீவிய சந்தாதாரராகவாவது இருந்து பத்திரிகையை நீடூழிகாலம் நடந்துவருமாறு ஆதரிக்கக் கோருகிறோம்.

THE TATA PRINTING WORKS, 5, THAMBU CHETTY ST. MADRAS.

Children, Ladies & Gentlemen!

For moral & Religious instructions

For Good manners, Duty, Conduct, Character &c.,

Read Balavinodini

IV. Volume:— all the 12 issues, with most *beautiful half-tone illustrations*, bound together in Gold Gilt calico, Price Rs. 2 0 0

V. Volume (1923) Do Do Rs. 2 0 0

III. Volume (1921) Do Do in reprint; will be ready shortly.

ஒவ்வொருவருடைய முன்னேற்றத்திற்கும் ஆதாரமாயிருக்கிற, நல்லொழுக்கம், நீதிபோதம், மாதுருபக்தி, பிதுரு பக்தி, பதிபக்தி, தெய்வபக்தி, தேசபக்தி, முதலியவைகளைக் கொடுக்கும் நிதி எது?

பாலவிநோதினி

4-வது வால்யூம் (1922) 12 சஞ்சிகைகளும் அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் பளபளப்பான தங்க கிலிட்டு காலிகோ பைண்டுசெய்தது.

விலை ரூ. 2 0 0

5-வது வால்யம் 1923 ஷை ஷை ரூ 2 0 0

3-வது வால்யூம் (1921ஸு) ஷை ஷை ஷை அச்சில்: சீக்கிரம் வெளிவரும்.

விலாசம்:—

மானேஜர்,

பாலவிநோதினி ஆபீசு,

இராயப்பேட்டை P. O. சென்னை.

குறிப்பு:—எல்லாவிதத் தமிழ் புத்தகங்களும் கிடைக்கும்.